# நிலவுடைமைச் சமூகத்தில் ஆரியர்

**க.கருப்பசாமி**
முனைவர்பட்ட ஆய்வாளர்
இக்கால இலக்கியத்துறை, தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

**மலர்:** 3
**இதழ்:** 1
**தொகுதி:** 1
**மாதம்:** ஜூலை
**வருடம்:** 2018
**ISSN:** 2454-3993

## முன்னுரை

தொல்குடி மக்களான இனக்குழு மக்கள் காலவளர்ச்சியில் நிலவுடைமைச் சமூகமாக மாறினர். நிலவுடைமைச் சமூகத்தில் வேந்தனுக்கே முதலிடம் கொடுக்கப்பட்டது. வேந்தன் ஐந்து நில மக்களைக் கட்டிக்காக்கும் நிலையில் தலைமைப்பொறுப்புடன் திகழ்ந்தான். 'கோ' என்றால் அரசன் என்ற பொருள் உண்டு. பழங்காலத்தில் மருதநிலத்தில்தான் நிலையான குடி என்ற அமைப்பு உருவானது. நிலையான குடியிருப்பு தோன்றியவுடன் வேந்தனுக்குக் கூடுதல் பொறுப்பு உண்டானது. அதாவது தன்னைச் சுற்றியுள்ள நிலங்களைப் பாதுகாத்தல், மக்களுக்கு துன்பங்கள் வராமல் பாதுகாத்தல், தன்னுடைய செங்கோல் வீரத்தை நிலைநாட்டுவதற்கு அந்தணர்களின் உதவியை நாடி வேள்விகள், சடங்கு சம்பிரதாயங்களின்மூலம் தன்னைச் சமூகத்தில் மேன்மைபடுத்திக் கொண்டான். உலகைத் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு ஆளும் வேந்தனானவன் அந்தணர்களை உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றி மகிழ்ந்த காரணத்தினால், எந்தவொரு ஆரம்ப செயல்களாக இருந்தாலும், அந்தணர்கள் முதன்மைப்படுத்தப்பட்ட சூழ்நிலையால், அந்தணர்களின் அதிகாரம் ஆட்சி செய்யும் நிலை உருவானது. இதனால் வேந்தர்களின் முழு ஆதரவு கிட்டியவுடன் அதிகாரத்தை கையில் எடுத்துக்கொண்டு எதையும் சாதிக்க முடியும் என்ற மனஉறுதிதான் ஆரியர்களின் பண்பாடானது தமிழர்களின் பண்பாட்டை மாற்றம் செய்தது என்பதைச் சங்க இலக்கியப் பனுவல்களின் மூலம் காணும்விதமாக இக்கட்டுரை முன்னெடுத்துச் செல்கிறது.

## ஆரியர்

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே ஆரியர்கள் இந்தியாவிற்குள் வந்துவிட்டனர். இவர்களின் மொழியானது வடமொழி. தொல்காப்பியர்,

> **"வடசொற் கிளவி வடவெழுத் தொரீ,**
> **எழுத்தொடு புணர்ந்த சொல்லாகுமே"[1] (தொல்.சொல்.நூ.884)**

என்று கூறுகிறார்.

"ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திலே கண்"[2] என்ற பழமொழியின் மூலம் ஆரியர்களின் வருகை பற்றி கூறுவர். "ஆரியர்கள் தங்களுடைய வெண்மை நிறத்தாலும், வெடிப்பொலிப் பேச்சுத் திறத்தாலும், கூத்தாலும் தமிழ் மன்னர்களை ஆட்டி வைத்தார்கள்"[3] என பாவாணர் கூறுகிறார்.

ஆரியர்கள் இந்தியாவிற்குள் எப்படி வந்தனர் என்பதை ரொமிலா தப்பார் “இந்தோ - ஈரானிய எல்லைப் பகுதி வழியாக ஆப்கானிஸ்தான் நீர் பிடிப்புப் (சப்த சிந்து) பகுதியில் நுழைந்த ஆரிய மொழியினரை நாடோடிகள் என்று கூறுவது பொருத்தமாகாது. மேய்ச்சல் இனத்தவர், நாடோடி மேய்ச்சல் இனத்தவர் என்று கூறுவதே பொருத்தமாகும். ஆடுகள், மாடுகள், குதிரைகள், சக்கர வண்டிகள் கொண்டு வந்து ஆரம்பத்தில் சிறியஅளவில் விவசாயம் செய்தனர். விவசாயிகளைப்போல மேய்ச்சல் இனத்தவர்களுக்கும் நீர்பிடிப்புப் பகுதி அவசியமான ஒன்று. அடிக்கடி திசை மாறும் சட்லஜ் போன்ற இதர நதிகள் திசை மாறும்போது, இவர்களும் தங்களுடைய இருப்பை மாற்றிக்கொள்ளும் சூழல் உருவானது. புதிய மேய்ச்சல் நிலங்களைத்தேட வேண்டிய நிலை உருவானதால், கைபர் - போலன் கணவாய் வழியாக பஞ்சாப் பகுதியில் குடியேறினார்கள் என்பதில்லை. சிறுசிறு எண்ணிக்கையில் பல குழுமங்களாக பல்வேறு வழியாக உள்ளே நுழைந்தனர். இதனைத் தவளைப் பாய்ச்சல் குடி பெயர்ப்பு”[4] என்கிறார். இதன்மூலம் ஆரியர்கள் கூட்டமாக இந்தியாவிற்குள் வரவில்லை, சிறு எண்ணிக்கையில் கைபர் கணவாய் வழியாக உள்ளே நுழைந்தனர் என்பதை அறிய முடிகிறது.

**வேதகாலத்தில் ஆரியர்**

சிதைந்துபோன சிந்து நதிக்கரையில் வாழ்ந்தவர்கள் ஆரியர்கள். ரிக்வேத கால மூதாதை இனத்தினர் மற்றவர்களிடம் உள்ள செல்வச் செழிப்புள்ள நாகரிகத்தை கைப்பற்றும் மனநிலை ஒன்றிலே குறியாக இருந்தனர். யமுனை நதிக்கரையில் இருக்கக்கூடிய அடர்ந்த இருள் சூழ்ந்த காடுகளைக் கடப்பதற்கு ஆரியர்கள் சிரமம் கொள்ளவில்லை. காடுகளைத் தீ வைத்து, இப்பகுதியில் தாங்கள் குடியேறுவதற்குப் பழங்குடி இனமக்களைக் காட்டிலும் உயர்வான சமூக மதிப்பு தாங்களுக்குத் தேவை என்பதை உணர்ந்தனர்.

“பழங்குடி இனமக்களை தாழ்ந்தவர்களாக (சூத்திரர்) புனைந்தனர். மற்ற மூன்று குழுவினரையும் ஆரியர்கள் ஏற்றுக்கொண்டனர். சத்திரியர் (போர் வீரர், ஆட்சியாளர்), பிராமணர் (புரோகிதம் செய்பவர்), வைசியர் (உபரி உணவுகளை சேகரிப்பதும், கால்நடைகளை வளர்ப்பதும்). வர்ணம் என்ற சொல் இந்நான்கு வர்க்க சார்புள்ள குலங்களில் ஒன்றைக் குறித்து வழங்கலாயிற்று”[5] இதனால் ஆரியர் சூத்திரர் என்ற வேற்றுமை தோன்றியது.

**வர்க்கப் பாகுபாட்டு மரபுக் கொள்கை**

இந்து சமயத்தின் புராண இதிகாசக் கதைகள் மட்டுமே இக்கொள்கையைக் கொண்டுள்ளன. சாதி அமைப்பானது மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்டதன்று. இறைவனால் தோற்றுவிக்கப்பட்டது என்பதே இதன் மையக் குறிக்கோள். இதன்படியே, பிரமனின் வாய், கை, தொடை, காலடி ஆகிய பகுதிகளிலிருந்து முறையே பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் தோன்றினர். இவர்களில் பிராமணர்களே உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டு, வேதங்கள் கற்று ஓதவும், இறைவனுக்கு ஏவல் பணி செய்யவும், சமயச்சடங்கு செய்வதன்மூலம் அன்பளிப்பைப் பெறுவதுமாக இவர்களது தொழில் இருந்தது. சத்திரியர்கள் நாட்டை ஆள்வது, வீரர்களாகப் பணிபுரிவது போன்ற தொழிலைச் செய்தனர். வைசியர்கள் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த வணிகம் செய்வதாக இவர்களது தொழில் அமைந்தது. இவர்களில் சூத்திரர்கள் ஏனைய மூன்று பிரிவினர்க்கும் பணி செய்வதும், சமுதாயத்தில் இழிவான பணிகளைச் செய்வதும் தொழிலாகும் என்று சநாதனக் கொள்கை கூறுகிறது.

**தொழில் கொள்கை**

சங்க காலத்தில் தொழில் அடிப்படையில் பிரிக்கப்பட்ட குழுக்கள் நாளடைவில் சாதி என்ற பொருண்மையில் மாறின. சாதிகள் பெருகுவதற்குத் தொழில்களே அடிப்படைக் காரணமாக இருந்தன என்பதற்கு, “தொழில் பிரிவினர் காலவோட்டத்தில் குலங்களாய் குடிகளாய் ஆயின”[6] என்ற கூற்றின்மூலம் அறிய முடிகிறது.

தொல்காப்பியர் காலத்தில் மன்னர்களுக்கு அருகில் ஆரியர்கள் நெருங்கிய தொடர்பில் இருந்தனர் என்றும், அவர்கள் செய்த தொழில் பற்றியும் புறநானூற்றுப் பாடல் விவரிக்கிறது,

**“ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி**
**மாங்குடி மருதன் தலைவனாக**
**உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்**
**புலவர் பாடாது உரைகவென் னிலவரை”**

என்ற பாடலின் மூலம் அரசனுக்கு அருகில் இருந்து கொண்டு அந்தணர்கள் வேதம் ஓதும் தொழிலைச் செய்து வந்தனர் என்பது புலனாகிறது.

### அந்தணர் தலைமை துளிர்விடுதல்

“ஆரியச் சடங்குமறைகள் வேந்தர்கள், உயர்ந்த குடியினர்கள், வேளாண்குடி மக்கள், வணிகர், பொருள் தேடவோர், வீரர், பெரியோர், சான்றோர், அரசர் போன்றோர் மத்தியில் உயர்ந்த அந்தஸ்து பெற்றன”[7] என்று இராஜ்கௌதமன் கூறுகிறார்.

பழங்காலத் தமிழ் மக்கள் இயற்கைத் தெய்வங்களான இடி, மின்னல், காற்று, நெருப்பு போன்றவற்றினை இயற்கையோடு இணைந்து வழிபட்டு வந்தனர். ஆனால் ஆரியர்களோ வேள்வி செய்யும்முறையில் மன்னர்களிடமும், மக்களிடமும் மூடநம்பிக்கையை வளர்த்தனர். “பிரபஞ்சத்தை ஆளும் கடவுளரின் ஆற்றலைப் பெறுதல் என்பதே மன்னனின் விருப்பமாக இருந்தது. ஆரியர்களின் வழி இந்த ஆற்றலைப் பெற முன்வந்தபின்பு அரசு சார்பில் வேள்வியும், யாகமும் தலைதூக்க ஆரம்பித்தன. நாளடைவில் மன்னர்கள் வேள்வியையும், யாகத்தையும் செய்து இறை ஆற்றலைத் தன் வயப்படுத்த எண்ணினர். இந்த ஆற்றலைப் புதுப்பிக்கும் செயலானது தொடர்ந்து நடைபெற்று வந்த காரணத்தினால். வேதகாலம் தொட்டு முடியாட்சி வரை வேள்வி மையமிட்ட சடங்கியல் சார்ந்ததாக உருவான காரணத்தினால் முடியாட்சி என்பதே யாகம், வேள்வி சார்ந்து நடத்தப்பட்டது என்றாகிவிட்டது. அடுத்தடுத்த காலகட்டத்தில் சிறிதுசிறிதாக இத்தன்மை வலுவடைந்தது. நாட்டின் சர்வ அதிகாரத்தையும் கொண்ட மன்னன் எல்லோரையும்விட உயர்ந்து நிற்பினும், அந்த அதிகாரத்தளம் தொடர்ந்து காக்கப்பட உயர்த்தப்பட பிராமணர்களின் யாகவேள்விச் சடங்கியல் தளத்தை அது சார்ந்து உள்ளதால் அதிகாரம் குறைந்து, அந்தணர்கள் தகுதியால் சமூகத்தில் முதலிடம் பெற்றனர். அதிகாரம் எனும் தளம் தகுதி எனும் தளத்திற்குள் இருப்பதால் அந்தணர்கள் மன்னர்களுக்கு மேல் உயர்ந்து விட்டனர்”[8] என்று ஆசிரியர் குணா கூறுகிறார்.

ஆரியர்கள் யாகம் வளர்த்தல் முறையில் வளர்ச்சிபெற்று சமூகத்தில் மூடநம்பிக்கையை உண்டாக்கி உயர்ந்த இடத்தில் செல்வாக்கு பெற்றனர் என்பதை,

**“அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்**
**ஐவகை மரபின் அரசர் பக்கமும்**
**இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்” (தொல்-பொருள்-1021)**

ஏன்ற தொல்காப்பிய நூற்பா மூலம் என்பதை அறிய முடிகிறது.

### வேள்வி குறித்த பதிவுகள்

வீரநிலைக் காலத்தைச் சார்ந்ததாகக் கருதப்படும் பழந்தமிழ் இலக்கியத்தில் பழங்குடிச் சமூகத்தின் சமய நம்பிக்கைகளான இயற்கையில் கடவுள் உறைதல், இயற்கையை வணங்குதல், உயிர்ப்பலி கொடுத்தல் போன்றவற்றோடு, வடஆரிய பண்பாட்டுக் கலப்பினால் உள் நுழைந்த புராணக் கடவுள், புராணக் கதை, யாகம் உள்ளிட்ட சடங்குகள் இடம்பெற்றன. ஆரியப் பண்பாட்டில் வேள்வி தரும் சடங்குமுறை, தமிழர் மரபில் புகுந்தது. வர்ணப் பாகுபாடு அற்ற சமத்துவமும், வாழ்வியல் மெய்ம்மைகளைக் கைவிடாத போக்கும் வேள்வி குறித்த தமிழரின் புதுமை தனித்துவத்தைக் காட்டுகிறது. “அந்தணர்களது செல்வாக்கின் காரணமாக யாகங்கள் நடத்தும் வழக்கம் தமிழகத்தில் அறிமுகமாகி இருக்கலாம் எனச் சொல்லப்படுகிறது.”[9]

வேள்வி செய்வது அரசனின் இன்றியமையாத ஒன்றாகக் கருதப்பட்டது. போரில் வெற்றி பெருவதற்கு யாகம் செய்வது முக்கிய அங்கமாகத் திகழ்ந்தது. நான்மறை முனிவர்கள் படைபோல் சூழ்ந்து வேள்வி செய்வதைப்பார்த்து, மற்ற மன்னர்களும் இவர்களுக்கு தொண்டு செய்தனர்,

**"அன்ற கேள்வி, அடங்கிய கொள்கை**
**நான்மறை முதல்வர் சுற்றம் ஆக**
**மன்னர் ஏவல் செய்ய, மன்னிய**
**வேள்வி முற்றிய வாய்வாள் வேந்தே" (புறம்.26:12-15)**

என்ற பாடலின் மூலம் வேள்விகள் செய்வது அரசனது இன்றியமையாதக் கடமையாக அன்றைய காலகட்டத்தில் இருந்துள்ளதை அறிய முடிகிறது.

**வேள்விச் சடங்குகள்**

சேர,சோழ,பாண்டிய மூவேந்தரும் ஒருகால் ஒருங்கே இருந்தனர். இவர்கள் ஒன்றாக இருப்பதைக் கண்ட ஔவையார், உரிய பார்ப்பார்க்கு அவர்களின் கை நிறையும் வரை பொற்பூவையும், பொன்னையும் நீராட்டிக் கொடுக்க வேண்டும் என்கிறார்.

**"ஏற்ற பார்பார்க்கு ஈங்கை நிறையப்**
**பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து" (புறம்)**

மேலும்,

**"கேள்வி முற்றிய வேள்வி அந்தணர்க்கு**
**அருங்கல நீரோடு சிதறிப் பெருந்தகை" (புறம்.361)**

என்ற பாடலடிகளின் வேள்வி செய்யும் அந்தணர்களுக்கு அணிகலன்களை வாரி வழங்கியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது. மூவேந்தர்களை, இரு பிறப்பாளர்கள் மூட்டுகின்ற முத்தீயைப் போல் அவர்கள் காட்சி தருவதாக,

**"ஒன்று புரிந்து அடங்கிய இருபிறப் பாளர்**
**முத்தீப் புரையக் காண்தக இருந்த" (புறம்.367)**

என்ற புறநானூற்றுப் பாடலில் கூறப்பட்டுள்ளது. அதியமான் நெடுமான் அஞ்சி போரில் புண்பட்டபோது ஔவையார், 'அறம் செய்யும் கொள்கை உடைய நான்மறை ஓதும் பார்ப்பாரில் முதல்வன் நல்ல தருப்பைப் புல்லைப் பரப்பிட, அதன் மீது அஞ்சியைக் கிடத்தினர் என்பதை,

**"அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்**
**நிறம்புரி பசும்புல் பரப்பினர் கிடப்பி" (புறம்)**

என்ற பாடல் மூலம் கூறப்பட்டுள்ளது. இறைவனுக்கு காணிக்கையாகச் செலுத்தும் பலிப்பொருள்களை வேள்வியில் செலுத்தி இறைவனுக்கு நேரடியாக செலுத்தலாம் என்ற நம்பிக்கையை உருவாக்கினர். அமரர் பேணியும், வேள்வி செய்தும் அவியுணவை உண்பித்தும் என்று பொருள்பட,

**"அமரர் பேணியும் ஆவுதி அருத்தியும்" (புறம்)**

என்று ஔவையார் பாடியுள்ளார். போர்க்களத்தில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காகவே அந்தணர்களை வேள்விச் சடங்கு செய்ய வைத்தனர். இதன் காரணமாகவே ஆரியர்கள் உயர்ந்த இடத்தில் வைக்கப்பட்டனர்.

வேள்வி நடத்துகின்ற இடத்திற்கு மக்கள் நேரடியாகச் சென்று வேள்வி செய்யும் முறையைக் கண்டு களித்தனர் என்பதை,

**"வேள்வியின் இழகுஇயல் விளம்புவோரும்" (பரி.19:43)**

என்ற பாடல் வரியின் மூலம் அறிய முடிகிறது. ஆரசர்கள் ஆரியச் செல்வாக்கில் கலந்தது போலவே மக்களும் நாளடைவில் ஆரியச் சமய நெறிகளில் ஒன்றினர்.

**"கேள்வி கேட்டுப் படிவம் ஒடியாது**
**வேள்வி வேட்டனை, உயர்ந்தோர் உவப்ப"** (பதிற்.74:1-2)

மற்றும்,

**"மந்திர விதியின் மரபுளி வழாஅ**
**அந்தணர் வேள்வி ஓர்க்குமே"** (முருகு.95-96)

என்ற பாடல் வரிகள் மூலம் வேள்விச் சடங்குமறைகள் தமிழர்களிடையே ஆதிக்கம் பெற்றதைக் கண்டறிய முடிகிறது.

**வேள்வியில் பலியிடுதல்**

மலை முகடுகளில் வாழந்த ஆரியர்கள் இயற்கை வேளாண்மை செய்ய நிலம் தேவைப்பட்ட காரணத்தினால், இயற்கைக் காடுகளை தீயிட்டு அழித்து சமதளமாக்கும் பணியில் ஈடுபட்டனர். அப்போது காட்டு மரங்களோடு மிருகங்களும் தீயில் கருகின. தீயில் கருகிய விலங்கின் சதைகளை ஆரியர்கள் சுவைத்தனர். காலப்போக்கில் இறைவனை முன்னிருத்தி பலவகையான யாகங்களையும், வேள்விகளையும் செய்தனர். வானுலகத் தெய்வங்களை மகிழ்விக்க வேண்டும் என்று வேள்வியில் ஆடு, மாடு, குதிரைகளை உயிரோடு தள்ளி எரித்தனர்.

செல்வக்கடுங்கோ வாழியாதான், குன்றாத கோட்பாட்டினை உடைய சான்றோராகிய சுற்றத்தார்கள் நீங்காது சூழ, போர்க்களத்தில் பகைவரை வென்று, களவேள்வியால் வெற்றிக் கடவுளுக்குப் பலியூட்டி, அக்கடவுளைப் புலவர் பாட இருந்து கேட்டு மகிழ்வித்தான் என்று கபிலரால் செல்வக்கடுங்கோ வாழியாதான் சிறப்பிக்கப்பட்டுள்ளான்.

**"நகையினும் பொய்யா வாய்மை, பகைவர்**
**புறஞ்சொல் கேளாப் புரைதீர் ஒன்மை**
**பெண்மை சான்று பெருமடம் இலைது"** (பதிற்.70: 12-14)

ஆரியர்கள் சங்ககால மன்னர்கள் பலரை வேள்வி செய்ய வைத்து வெற்றி கண்டனர். அந்தணர் உதவியால் இராசசூய யாகத்தைச் செய்து இராசசூயம் வேட்ட பெருவேள்வி ஒன்றைச் செய்தான் (புறம்.224) பாலைக் கௌதமனார் என்ற பார்ப்பனாரும் அவர்தம் மனைவியாரும் சொர்க்கம் போவதற்கு வேள்வி செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொண்டதற்கு இணங்க பல்யானை செல்கெழு குட்டுவன் என்ற சேர மன்னன் பார்ப்பன் உதவிகொண்டு பத்து வேள்விகள் செய்தான் என்று பதிற்றுப்பத்தின் 3-ஆம் பத்து எடுத்தியம்புகிறது. அந்தணப் புலவர்களும் அரசனும் நெருங்கிப் பழகி இருந்ததை அறிய முடிகிறது. அந்தணர்களின் தந்திரப் போக்குத் தெரியாமலேயே அவர்களின் அரசியலில் உழன்று இருக்கின்றனர் மன்னர்கள்.

**முடிவுரை**

சங்க அகப்பாடல்களில் மட்டும் ஆரியர் என்ற சொல் அந்தணரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. புறப்பாடல்களில் அந்தணன், அந்தணாளன், பார்ப்பன் போன்ற சொற்களே வேதம் ஓதுபவர்களையும், வேள்விகள் வளர்ப்பவர்களையும், நற்குணம் கூறுபவர்களையும் கூறுகிறது. ஆரியர் என்ற சமூகம் நாடோடிச் சமூகமாக இருந்து பல்வேறு குழுக்களிடையே இனமோதல் ஏற்பட்டு, யமுனை நதிக்கரையில் நிலையான சமூகத்தை ஏற்படுத்தியது. ஆரம்ப காலகட்டத்தில் கால்நடைகளை வளர்ப்பவர்களாகவும், வேளாண்மை செய்பவர்களாகவும் இருந்த ஆரியர்கள் பின் வேள்விகள் வளர்ப்பவர்களாக உருமாறினர். ஏனென்றால் வேள்வி எதையும் சாதிக்கும் வல்லமைகொண்ட ஆற்றல் வாய்ந்தது. வேத காலத்தில் வேதம் ஓதுவதால் நால்வகை வர்ணப் பாகுபாட்டில் பார்ப்பனர் முதன்மையாக வைத்துப் போற்றப்பட்டனர். அரசனைக் காட்டிலும் ஆரியர்களே முதன்மையாக வைத்துப் போற்றப்பட்டான். அரசனுக்கு அதிகாரம், கடவுளரின் ஆற்றல் பெறுதல், தகுதி ஆகியவற்றைப் பெறுவதற்காக வேள்விகள் நடத்தியும், சடங்குகள் செய்தும் மன்னனின் புகழ் நிலைபெறுவதற்குக் காரணமாக

அமைந்ததால் அரசனைக் காட்டிலும் முதன்மையாக வைத்துப் பார்ப்பனர் போற்றப்பட்டான். வேள்வித் தீயில் ஆடு, மாடு, குதிரைகளைப் பலிப்பொருட்களாகப் பயன்படுத்தியதால் இனக்குழுக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. செய்யும் தொழில் அடிப்படையில் இனக்குழுக்களைத் தாழ்நிலையில் வைத்தனர். இவ்வகையில் அரசர்களுக்கும் உயர்ந்தவர்களாகத் தம்மை கற்பித்துக்கொண்டு நிலவுடைமைச் சமூகங்கள் கீழ்நிலை அடைய ஆரியர்கள் ஒரு காரணமாக இருந்துள்ளதை அறிய முடிகிறது.

**துணைநின்ற நூல்கள்**

1 பாலசுப்பிரமணியன், கு.வெ. தொல்காப்பியர், தெளிவுரை, ப.378
2 தேவநேயப் பாவாணர், ஞா. ஒப்பியன் மொழி நூல், ப.1
3 மேலது. ப.1
4 மார்க்ஸ், அ. ஆரியக் கூத்து,ப.38
5 கோசாம்பி, டி.டி. பண்டைய இந்தியா, ப.129.
6 இறையரசன்,பா, தமிழர் நாகரிக வரலாறு, பக்-192.
7 ராஜ்கௌதமன், தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும்
8 காமாட்சி, மு. சங்ககாலம் தொல்பொருள் ஆய்வுகள், ப, 215.
9 கோமதி நாயகம், பி. தென்னிந்திய வரலாறு, ப.46